## எறையூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை: திருமதி. L. சாவித்திரி.

நாள்: 6.2.2024

தீர்மான எண்:86 /2023

பொருள் : மனைப்பிரிவு – வானூர் ஊராட்சி – வானூர் ஊராட்சி ஒன்றியம் – எறையூர் கிராமம் – புதிய சர்வே எண். 30/1B-ல் 2.70 ஏக்கர் (அ) 10927.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – சார்பு.

பார்வை :

1. மனுதாரர் திரு. தசரதன் s/o கணபதி என்பவரின் விண்ணப்ப நாள்:13.02.2023.

2. நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவரகளின் இறுதி ஒப்புதல் அனுமதி எண்:59/2023.

3. அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 4.2.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.1.2020.

4. அரசாணை எண்: 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்: 4.05.2017

5. அரசாணை எண்: 141 79 வீட்டு வசதி மற்றும் நகரப்புற வளர்ச்சி துறை UD4(3) நாள்: 23.09.2020.

6. அரசாணை எண்: 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை UD4(1) நாள்: 09.12.2020.

7. அரசு கடிதம் எண்: 19113/நவ4(3)/2017–1, வீட்டு வசதி மற்றும் நகரப்புற வளர்ச்சி துறை நாள்: 30.8.2017.

8. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:13686/2017/LA1, நாள்:8.9.2017

9. இவ்வூராட்சி மன்றத் தீர்மான எண்86 நாள்: 9.12.2023

உத்தரவு,

பார்வையில் கண்ட 2 முதல் 8 வரையுள்ள நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின் படியும் அரசாணையின் படியும் பார்வை 9–யில் கண்ட இவ்வூராட்சியின் தீர்மானத்தின் படியும் எறையூர் கிராமம் புதிய சர்வே எண்:30/1B-ல் 2.70 ஏக்கர் அல்லது 10927 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் மனைகளாக பிரிக்கப்பட்ட மனைப்பிரிவில் மனை 1 முதல் 62 வரை உள்ள மனைகளை விற்பனை செய்வதற்கும் பதிவு செய்வதற்கும் (Registration) கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் படி அனுமதி அளிக்கப்படுகிறது.

1. நகர ஊரமைப்பு துறை (வி) அவர்களின் கோப்பு 120CNO9157/2022/TCP நாள்:13.4.2023 மனைப்பிரிவு நிபந்தனைகள் 1 முதல் 9 வரை உள்ளவற்றை கடைப்பிடிக்க வேண்டும்.

2. சாலையின் இருபுறமும் நிழல் தரும் மரங்கள் நடப்பட வேண்டும்.

3. மனைப்பிரிவில் உள்ள அனைத்து சாலைகளும் ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

4. ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது இடத்தில் எந்த ஒரு அத்து மீரலும் செய்யக்கூடாது. (ஒப்படைப்பு செய்யப்பட்ட ஆவண எண்:2828 நாள்:21.4.2023 பிரிவு A உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது 48.80 சதுர மீட்டர், பிரிவு B. மின்சார துறைக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது 54.54 சதுர மீட்டர்)

5. சாலையின் இருபுறமும் வடிகால் வசதி செய்யப்பட வேண்டும்.

6. ஒவ்வொரு மனையிலும் வீடு கட்டும் போது ஊராட்சி மன்றம் மற்றும் நகர ஊராமைப்பு துறை இயக்குநர் அவர்களிடம் அனுமதி பெற்று வீடு கட்ட வேண்டும்.

மேற்கண்ட சிறப்பு நிபந்தனைகள் படி மனைப்பிரிவு அனுமதி (LAYOUT APPROVAL) அளிக்கப்படுகிறது.

L. Savitha 6/2/24

தலைவர்
ஏறையூர் ஊராட்சி மன்றம்

தலைவர்,
ஏறையூர் ஊராட்சி மன்றம்,
வானூர் ஊராட்சி ஒன்றியம்.

நகல்: 1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்படுகிறது.

2. நகர ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்படுகிறது.

3. சார்பதிவாளர் பதிவுத்துறை வானூர் அவர்களுக்கு மனைகளை பதிவு செய்வதற்கு அனுப்படுகிறது.

4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்படுகிறது.

வரைபட அனுமதி நகல்: 3 நகல்.

பெறுதல்:

திரு. தசரதன் S/O கணபதி,
114 கார் வீதி,
லாஸ்பேட்,
புதுச்சேரி.